# இளந்தமிழ் - 2





உலகத்தமிழ்க் கல்விக்கழகம்


www.worldtamilacademy.com

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | உயிரெழுத்துச் சொற்கள் | 1 |
| 2. | மெய்யெழுத்துச் சொற்கள் | 3 |
| 3. | உயிர்மெய்யெழுத்துகள் | 4 |
| 4. | நீதிக்கதைகள் | 5 |
| 5. | வடிவங்கள் | 10 |
| 6. | போக்குவரத்துச் சாதனங்கள் | 11 |
| 7. | தாவரங்கள் | 12 |
| 8. | செடியின் பாகங்கள் | 13 |
| 9. | மரங்கள் | 14 |
| 10. | நாபிறழ் பயிற்சி | 16 |
| 10. | பருவ காலங்கள் | 17 |
| 11. | வானிலை | 18 |
| 12. | பாடல்கள் | 20 |
| 13. | ஒலிமரபுச் சொற்கள் | 22 |
| 14. | என் செல்லம் | 27 |
| 15. | என்னைப்பற்றி | 28 |
| 16. | உணவு வகைகள் | 29 |
| 17. | தின்பண்டங்கள் | 31 |
| 18. | தானியங்கள் | 33 |
| | | |

# உயிரெழுத்துச் சொற்கள்



| | | | | |
|---|---|---|---|---|
| அ | <br>அம்மா | <br>அம்மி | <br>அம்பு | <br>அணில் |
| ஆ | <br>ஆடு | <br>ஆமை | <br>ஆந்தை | <br>ஆறு |
| இ | <br>இலை | <br>இஞ்சி | <br>இசைக்கருவி | <br>இல்லம் |
| ஈ | <br>ஈட்டி | <br>ஈ | <br>ஈரம் | <br>ஈசல் |
| உ | <br>உரல் | <br>உதடு | <br>உடுக்கை | <br>உடை |
| ஊ | <br>ஊதல் | <br>ஊசல் | <br>ஊன்றுகோல் | <br>ஊசி |

| | | | | |
|---|---|---|---|---|
| எ |  எருமை | 8 எட்டு |  எலும்பு |  எருது |
| ஏ |  ஏணி |  ஏலக்காய் | 7 ஏழு |  ஏர் |
| ஐ |  ஐவர் | 5 ஐந்து |  ஐங்கோணம் | 50 ஐம்பது |
| ஒ |  ஒட்டகம் | 1 ஒன்று |  ஒலிப்பெருக்கி |  ஒளி |
| ஓ |  ஓடம் |  ஓட்டம் |  ஓவியம் |  ஓநாய் |
| ஔ |  ஔவை |  ஔடதம் | | |
| ஃ |  எஃகுவாள் |  அஃறிணை | | |

**நினைவுகொள்க**

| | | |
|---|---|---|
| அ | ஆ | இ |
| ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ |
| ஒ | ஓ | ஔ |
| | ஃ | |

# மெய்யெழுத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| க்  கொக்கு | ங்  சங்கு | ச்  தச்சர் |
| ஞ்  இஞ்சி | ட்  பட்டம் | ண்  நண்டு |
| த்  கத்தி | ந்  பந்து | ப்  சீப்பு |
| ம்  மரம் | ய்  நாய் | ர்  தேர் |
| ல்  சேவல் | வ்  செவ்வாழை | ழ்  தாழ்ப்பாள் |
| ள்  தேள் | ற்  நாற்று | ன்  மான் |

# உயிர்மெய்யெழுத்துகள்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

# பேராசை பெரு நஷ்டம்.

கந்தசாமி என்ற ஒரு ஏழை தன் மனைவியுடன் சிறு குடிசை ஒன்றில் வாழ்ந்து வந்தான். வயதாகி விட்டதால் வேலைக்குச் செல்ல முடியாது போகவே, தங்களிடம் இருந்த பொருட்களை விற்று சாப்பிட வேண்டி ஏற்பட்டது. நாட்கள் செல்லச்செல்ல... அவர்கள் உண்ண உணவின்றித் தவித்தனர்.

இந்நிலையில் அவன் ஆண்டவனை நோக்கி... 'இறைவா எங்களை ஏன் இப்படிப் படைத்தாய்... இது இப்படியே நீடித்தால்... வறுமை தாங்காது நாங்கள் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை' என வேண்டினான்.

அவன் மீது இரக்கம் கொண்ட இறைவன் அவன் முன் தோன்றி அவனின் குறைகளைத் தீர்க்க... அவனுக்கு வாத்து ஒன்றைப் பரிசளித்தார். அந்த வாத்து தினம் ஒரு பொன் முட்டை இடும் என்றும் அதை விற்று அன்றாடம் குடும்பத்திற்குத் தேவையானவற்றை வாங்கி வாழ்நாளைச் சந்தோஷமாக கழிக்கலாம் என்றும் கூறி மறைந்தார்.



வாத்து தினமும் ஒவ்வொரு பொன் முட்டையிட அவர்கள் அதனை விற்று வாழ்க்கையை இனிதாகக் கழித்தனர்.

ஒரு நாள் கந்தசாமியின் மனைவி தன் கணவனிடம் சென்று ‘தினம் தினம் இந்த வாத்து ஒரே ஒரு பொன் முட்டையே இடுகின்றது, இப்படியே இருந்தால் நாம் எப்படிப் பெரிய பணக்காரர் ஆவது என்று சொல்லி, இந்த வாத்தின் வயிற்றில் இருக்கும் எல்லா முட்டைகளையும் நாம் எடுத்தால் அதைப் விற்று பெரிய பணக்காரர் ஆகிவிடலாம் என்று ஒரு உபாயம் சொன்னாள். இதைக் கேட்ட கந்தசாமிக்கும் அது சரியெனத் தோன்றியது.



உடனே, கந்தசாமி அந்த வாத்தைப் பிடித்து வாத்தின் வயிற்றில் இருக்கும் எல்லா முட்டைகளையும் எடுக்க வாத்தைக் கொன்று அதன் வயிற்றைக் கிழித்தான். “ஆ” என்ன ஆச்சரியம் அந்த வாத்தின் வயிற்றில் ஒருமுட்டையுமே இருக்கவில்லை. அதன் வயிற்றில் மற்றைய வாத்துகள்போல் வெறும் குடலே இருந்தது கண்டு அழுதனர்.

தினம் ஒரு பொன் முட்டையிட்ட வாத்து இறந்து விட்டதால், வறுமை அவர்களை மீண்டும் சூழ்ந்துகொண்டது. தங்கள் பேராசையே பெரும் தரித்திரத்தைத் தந்தது என மனம் வருந்தி ஏழ்மையாகவே வாழ்ந்து உண்ண உணவின்றி இறந்தனர்.

**ஆசை அளவுக்கு மிஞ்சினால் அது பேராசை.**
**பேராசை பெரு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் தரும்.**

# டிங்குவின் கவலை

சர்க்கஸ் கூடாரத்தில் ஒரு ஒட்டகம், டிங்கு என்ற என்ற தன் குட்டியுடன் வாழ்ந்து வந்தது. டிங்கு எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். கூடாரத்தில் இருக்கும் தன் நண்பர்களுடன் விளையாடும். அன்று யாருடனும் விளையாடாமல் சோகமாக இருந்தது.



அம்மா : டிங்கு நீ விளையாடாச் செல்லவில்லையா? ஏன் சோகமாக இருக்கிறாய்?

டிங்கு : ஏன் அம்மா நான் மட்டும் இப்படி இருக்கிறேன்?

அம்மா : எப்படி இருக்கிறாய்? அழகாக இருக்கிறாய்!

டிங்கு : நீங்களும் என்னைக் கேலி செய்கிறீர்களா? என்னைப் பாருங்கள் மற்றவர்களை விட என் தோல் கடினமானதாக உள்ளது. என் கால்கள் ஏன் இப்படி உள்ளது?

அம்மா : இப்படியெல்லாம் பேசக்கூடாது டிங்கு. நமது உடல் தான் நமக்குப் பாதுகாப்பு. சரி.... நமது வாழ்விடம் எது?


டிங்கு : சர்க்கஸ் கூடாரம் தானே?

அம்மா : இல்லை மகனே!.. நாம் பாலைவனத்தில் வாழ்பவர்கள்.

டிங்கு : என்ன சொல்கிறீர்கள் அம்மா....? எனக்குப் புரியவில்லை.

அம்மா : நீ பிறந்தவுடனே இங்கு நம்மைக் கொண்டு வந்துவிட்டார்கள். அதனால் உனக்குத் தெரியவில்லை. பாலைவனச் சூழலுக்கு ஏற்ப நம் உடல் அமைப்பு உள்ளது.





டிங்கு : பாலைவனம் எப்படி இருக்கும் அம்மா?


அம்மா : இரவில் கடுங்குளிராகவும் பகலில் அதிக வெப்பமாகவும் இருக்கும். அதனால் தான் நமது தோல் ரோமங்களுடன் கடினமானதாக உள்ளது. மேலும் அது சமதளம் அல்ல! மணற்பரப்பாகும்.

டிங்கு : ஓ ஓ! மணலில் நடக்கத்தான் நீண்ட கால்களா?...அம்மா!

அம்மா : சரியாகக் கூறினாய்! நம் கால்களுக்கு ஒரு சிறப்பும் உண்டு. நமக்கு மட்டும் தான் மூன்று மடக்கும் மூட்டு இணைப்புகள் உள்ளன.

டிங்கு : சரிதான் அம்மா. நம் கண்களைச் சுற்றி ஏன் இவ்வளவு முடிகள் (ரோமங்கள்) உள்ளன?

அம்மா : பாலைவனம் என்றாலே புழுதிக்காற்று தான்...... மணலோ தூசியோ பாதிக்காமல் கண்களைப் பாதுகாக்கவே நமக்குத் தடித்த நெருக்கமான முடிகள் உள்ளன.



டிங்கு : இப்போது புரிகிறது அம்மா.. பாலைவனத்தில் நமக்கு என்னென்ன உணவுகள் கிடைக்கும்?







அம்மா : பாலைவனத்தில் சப்பாத்திக்கள்ளி, கற்றாழை போன்ற முட்தாவரங்கள் தான் கிடைக்கும். அதை உண்பதற்கு ஏற்ப நமது உதடும் நாக்கும் உள்ளது.

ஒட்டகம் : ஆமாம் டிங்கு. இப்போது நீ நண்பர்களுடன் விளையாடச் செல்வாயா?





இதோ! என்று தன் கட்டைக்குரலால் கத்திக்கொண்டு விளையாடச்சென்றது டிங்கு.

# வடிவங்கள்

## 1. இருபரிமாண வடிவங்கள்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| வட்டம் | முக்கோணம் | செவ்வகம் | சதுரம் |
|  |  |  |  |
| சாய்சதுரம் | நீள்வட்டம் | நட்சத்திரம் | ஐங்கோணம் |

## 2. முப்பரிமாண வடிவங்கள்

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| கனசதுரம் | கோளம் | உருளை | முப்பட்டகம் |
|  |  |  | |
| கனசெவ்வகம் | கூம்பகம் | கூம்பு | |

# போக்குவரத்துச் சாதனங்கள்



மிதிவண்டி



மகிழுந்து




பேருந்து



சரக்குந்து



தீயணைப்பு வாகனம்




மருத்துவ ஊர்தி



விமானம்



தொடர்வண்டி




கப்பல்

# தாவரங்கள்



புல்



மரம்




செடி




கொடி

# செடியின் பாகங்கள்




# மரங்கள்



ஆலமரம்




அரச மரம்



வேப்ப மரம்



பூவரச மரம்



புளிய மரம்



மூங்கில் மரம்



அத்தி மரம்



தேக்கு மரம்



தென்னை மரம்

# மரங்கள்



முருங்கை மரம்




நாவல் மரம்



கொய்யா மரம்



மாமரம்



பலா மரம்



வாழை மரம்



எலுமிச்சை மரம்



நெல்லிக்காய் மரம்




பனை மரம்

# நாபிறழ் பயிற்சி



யாரு தச்ச சட்டை
எங்க தாத்தா தச்ச சட்டை.






கொளுத்தும் வெயிலுல
சடுகுடு விளையாட
குடுகுடுவென ஓடிவந்து
சடசடவென விழுந்தான்.





கூவுற கோழி கொக்கரகோ கோழி
கொக்கரகோ கோழி கொழுகொழு கோழி
கொழுகொழு கோழி  கொத்துர கோழி.





ஒரு குடம் எடுத்து
அரை குடம் இறைத்து
குறை குடம் நிரப்பி
நிறை குடம் ஆக்கினாள்.



# பருவ காலங்கள்

| | |
|---|---|
| கார்காலம் |  |
| கூதிர்காலம் |  |
| முன்பனிக்காலம் |  |
| பின் பனிக்காலம் |  |
| இளவேனில்காலம் |  |
| முதுவேனில்காலம் |  |

# வானிலை



வெயில்



மழை



இடி



மின்னல்



மேகம்

# வானிலை



பனி



புயல்



சூறாவளி



ஆலங்கட்டி மழை




தென்றல்

## மரம் வளர்ப்போம்!

தாத்தா வைத்த தென்னையுமே,
தலையால் இளநீர் தருகிறது!
பாட்டி வைத்த கொய்யாவும்,
பழங்கள் நிறைய கொடுக்கிறது!
அப்பா வைத்த மாஞ்செடியும்,
அல்வா போல பழம் தருது!
அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது!
அண்ணன் வைத்த மாதுளையும்,
கிண்ணம் போல பழுக்கிறது!
சின்னஞ்சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே...



## அணிலே அணிலே ஓடி வா



அணிலே அணிலே ஓடி வா
அழகிய அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டு பழம் கொண்டு வா
பாதிப் பழம் என்னிடம்
மீதிப் பழம் உன்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.





# பாடல்கள்

## யார் வருகிறார்?

யார் வருகிறார்?
அங்கே பார் அழகை!
அசைந்து வரும் அழகை
குட்டிக் கண்கள் தானிருக்கும்
குண்டுபையன் அவனுக்கு
நீண்ட வாலிருக்கும்
விரிந்த காதிருக்கும்
தும்பிக்கை நீண்டு வரும்
துள்ளலுடன் ஓடி வரும்
தூண் போல நான்கு கால்கள்
துணையாகத்தான் இருக்க
வெள்ளை நிறத் தந்தத்துடன்
வேக நடை போட்டு வருகிறார்
யார் வருகிறார்
யார் வருகிறார்?



# ஒலிமரபுச் சொற்கள்



காகம் கரையும்



குயில் கூவும்



நாய் குரைக்கும்



குதிரை கனைக்கும்



தவளை கத்தும்



யானை பிளிறும்

# ஒலிமரபுச் சொற்கள்



புலி உறுமும்



கோழி கொக்கரிக்கும்



ஓநாய் ஊளையிடும்



தேனீ ரீங்காரமிடும்



எலி கீச்சிடும்



எருது எக்காளமிடும்

# ஒலிமரபுச் சொற்கள்



பசு கதறும்



ஆடு கத்தும்



பூனை சீறும்



நரி ஊளையிடும்



குரங்கு அலப்பும்



கழுதை கத்தும்


# ஒலிமரபுச் சொற்கள்




சிங்கம் முழங்கும்



கரடி உறுமும்



சிறுத்தை உறுமும்



மயில் அகவும்



ஆந்தை அலறும்




கிளி பேசும்

# ஒலிமரபுச் சொற்கள்




புறா குனுகும்



சேவல் கூவும்



வண்டு முரலும்



வாத்து கத்தும்



கழுகு அலறும்



குருவி கீச்சிடும்

# என் செல்லம்!

இவன் பெயர் ‘மணி’

லொள்... லொள்... என்று இவனது குரல் கரகரப்பாக இருக்கும்.

நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் பாய்ந்து வருவான்.

விளையாடும்போது பந்தை எடுத்து வருவான்.

இவனைப் பார்ப்பதற்காகவே நண்பர்கள் எனது வீட்டிற்கு வருவர்.

என் நண்பர்களுடனும் நன்றாகப் பழகுவான்.

மணியுடன் அதிக நேரம் விளையாடுவதால் அம்மாவிடம்
நான் திட்டு வாங்குவேன்.


எப்பொழுதும் என்னை உரசியபடியே செல்வான்.

ரொட்டித்துண்டுகள், இறைச்சி என்றால் மிகவும் பிடிக்கும்.

எனது அப்பாவுடன் நடைபயிற்சி செல்வான்.

தனது வாலை ஆட்டி அன்பை வெளிப்படுத்துவான்.

எங்கள் வீட்டைக் கண்ணைப் போலக் காப்பான்.



# என்னைப்பற்றி

என் பெயர் அமுதன்.

நான் நான்காம் வகுப்புப் படிக்கிறேன்.

கிளி வளர்க்கிறேன்.

அது பழங்களைக் கொத்தித் தின்பதைப் பார்த்து மகிழ்வேன்.

நகைச்சுவைக் கதைகள் வாசிப்பதும் படக்காட்சிகளைப் பார்ப்பதும் மிகவும் பிடிக்கும்.

இரவில் தாத்தா பாட்டியிடம் கதை கேட்டுத் தூங்குவேன்..

காளான் குழம்பும், சாம்பார் சாதமும், உருளைக்கிழங்கு பொரியலும் எனக்கு விருப்பமான உணவுகள் ஆகும்

எல்லோரிடமும் அன்புடனும் மரியாதையுடனும் பேசுவேன்.

சரியான நேரத்திற்குப் பள்ளிக்குச் செல்வேன்.

உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.

பள்ளி ஆண்டுவிழாவில் பாடல் பாடி முதல் பரிசு பெற்றுள்ளேன்.





# உணவு வகைகள்



சோறு



பொங்கல்



தோசை



இட்லி



சப்பாத்தி



உப்புமா

# உணவு வகைகள்



இடியாப்பம்



கஞ்சி



பூரி



ஊத்தப்பம்



கூழ்



ஆப்பம்

# திண்பண்டங்கள் (இனிப்பு)



கடலை மிட்டாய்



எள்ளுருண்டை



அதிரசம்



பொரி உருண்டை



லட்டு



கொழுக்கட்டை



பணியாரம்



புட்டு



பஞ்சுமிட்டாய்

# தின்பண்டங்கள் *(காரம்)*



வடை



முறுக்கு



சோளப்பொரி



சுண்டல்



சீடை



ஓமப்பொடி



காராச்சேவு



தட்டை



சீவல்

# தானியங்கள் (நவதானியங்கள்)



நெல்



கோதுமை



துவரை



பாசிப்பயறு



எள்



மொச்சை



உளுந்து



கொள்ளு



கொண்டைக்கடலை

# தானியங்கள் (முளைதானியங்கள்)



பச்சைப்பயறு



வெந்தயம்



தட்டைப்பயறு



வேர்க்கடலை



சூரியகாந்திவிதை



வெள்ளரிவிதை



கொள்ளு



கறுப்பு உளுந்து



பட்டாணிக் கடலை

# தானியங்கள் (சிறுதானியங்கள்)



கம்பு



கேழ்வரகு



தினை



பனிவரகு



வரகு



சாமை



குதிரைவாலி



சோளம்

புகைப்படம்

பெயர் : ..................................................................................................

வயது : ..........................

பள்ளியின் பெயர்:

.......................................................................................................................

ஆண்டு : ..........................

